THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே**
**சகல ஞானத்தோடும் பரிபூரணமாக**
**வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
அர்ஜுனன்

ஜூன்
2006
மரம் 6
கனி 7

ஆண்டு சந்தா ரூ. 50/-
தனி பிரதி ரூ. 5/-

## ஆண்டவர் இயேசுவுக்கு ஊழியம் செய்ய இதோ ஓர் அருமையான வாய்ப்பு

## வத்தலக்குண்டு வேதாகம கல்லூரியில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

**கல்வி தகுதி: 10th அதற்குமேல்**




உங்களைப் பற்றிய முழுவிபரத்துடன்
தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி

நிர்வாகி
வத்தலக்குண்டு வேதாகம கல்லூரி
தபால் பெட்டி எண்:5
வத்தலக்குண்டு - 624 202

**Mobile: 9443 558041**

யோவான்12:26





## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி

**உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மற்றும்**




**உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.**




**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**
**Phone: 04543 263278 Cell: 9443558041**


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் - 6** **ஜூன் - 2006** **கனி - 7**


ஆசிரியருரை

# ஒத்த வேஷந்தரியாதிருங்கள்
## BE NOT CONFORMED



அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற தினாலே மறுரூபமாகுங்கள்" (ரோம.12:2) என்று எழுதியுள்ளார். ஒத்த வேஷம் என்று சொல்லும்போது இவ்வுலகத்திற்கு ஏற்றாற்போல தங்களை மாற்றிக் கொள்வது. இங்கே நாம் நினைவுகூரவேண்டிய ஒரு வசனம், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" (கொலோ.1:13). முழுவதும் பாவத்திலிருந்த நம்மை அந்த அதிகாரத்தினின்று அதாவது இப்பிரபஞ்சத்தின் அதிகாரியாகிய பிசாசானவனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபைக்குள் பிரவேசிக்க செய்த நம் பரமபிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். இப்படி நம்மை இப்பிரபஞ்சத்திலிருந்து விடுவித்த கர்த்தரை மறந்து அதற்கு ஒத்த வேஷந்தரிக்கலாமா? எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உன் வாழ்வில் கர்த்தர் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் நீங்கள் ஒவ்வொரு நாளும் மறுரூபமாகுங்கள்.

அப்போஸ்தலனாகிய பேதுரு முதல் நூற்றாண்டு காலத்திலே முதல் பிரசங்கியார். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சபையில்

சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் இந்தப் பேதுரு மாய்மாலம் பண்ணினதை கலாத்தியர் புஸ்தகத்திலே வாசிக்கிறோம். "எப்படியெனில் யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர் களுக்குப் பயந்து, விலகிப்பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணி னார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்: யூதனாயிருக்கிற நீர் யூத முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?" என பவுல் வினவுகிறார் (கலா.2:12-14). அன்பானவர் களே, இன்றைக்கு இருக்கிற கிறிஸ்தவர்களில் பலர் இவ்விதமாக மாயம்பண்ணு கிறார்கள். கிறிஸ்தவர்களோடு ஒருவிதமான பழக்கவழக்கங்களும், மற்றமக்களோடு வேறுவிதமான பழக்கவழக்கங்களோடும் பழகிவருகின்றனர். இது மாய்மாலத் தையும், இவ்வுலகத்திற்கேற்ற வேஷத்தையும் வெளிப்படுத்துகிறது. ஒரு சபையில் உள்ள மூப்பரை நான் அறிவேன். அவர் வேலை கிடைப்பதற்காக புறஜாதிபெயரை வைத்துக்கொண்டு வேலை வாங்கி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேலை பார்த்தார். ஆனால் சபையின் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும், அவர் கிறிஸ்தவபெயரை வைத்துக்கொண்டு அழைக்கப்பட்டார். அவர் ஒரு சபைக்கு மூப்பராகவும் இருந்தார். இது எப்பேர்பட்ட வேஷம் பார்த்தீர்களா? இவ்விதமான ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என்று பவுல் எழுதுகிறார்.

அப்போஸ்தலனாகிய பேதுரு பெண்களுக்கு எழுதும்போது: "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" (1பேது.3:3-5). இவ் வசனங்களிலே புறம்பான அலங்கரிப்பைக் குறித்துப் பேதுரு பேசுகிறார். இந்த விதமான அலங்கரிப்புக்கே இன்றைய கிறிஸ்தவ பெண்களில் அதிகமானபேர் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தங்களைக் காட்டிலும் மற்றவர்கள் சிறப்பாக உடுத்தி விடக்கூடாது என்று நினைத்து உயர்வான வஸ்திரங்களை போட்டியிட்டுக்கொண்டு உடுத்துகிறார்கள். இது எதைக் காட்டுகிறது. புறம்பான அலங்கரிப்பைக் காட்டுகிறது. இவ்விதமான புறம்பான அலங்கரிப்பு பக்திவிருத்தியை உருவாக்காது. மாறாக பொறாமையையே உருவாக்கும். வேத வசனம் சொல்லுகிறதான அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள

ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்பேலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது" (1பேது.1:24). மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் ஆகையால் மண்ணுக்கே திரும்புவான். அவனுடைய மாம்சமெல்லாம் புல்லைப்போல காய்ந்து ஒன்றுமில்லாமற்போகிறது. அந்தப்படியே அவனுடைய மகிமையெல்லாம் அதாவது பட்டம், பதவி மற்றும் அவனது பெருமைக்குரியதெல்லாம் புல்லின்பூவைப்போலவும் ஒழிந்துபோகிறது. புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது என்ற வசனத்தின்படியே அவையெல்லாம் ஒன்றுமில்லாமற்போகிறது. "தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை" (பிர.5:15). இப்படியிருக்க புறம்பான அலங்கரிப்பு எதற்கு? அன்பான சகோதரிகளே சற்று சிந்தியுங்கள். சாராளைப்போல கீழ்ப்படிதலுள்ள அலங்கரிப்பைத் தரித்துக்கொள்ளுங்கள். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:9). இப்பேர்பட்ட அழைப்பைப் பெற்ற கிறிஸ்தவ பெண்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? இதை ஒவ்வொருநாளும் நினைத்து மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படவேண்டும். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் என்பதை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று எப்படிப்பகுத்தறிவது? பவுல் அந்த அதிகாரத்தில் பின்னுள்ள வசனங்களில் தெளிவுபடுத்துகிறார். "ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையைவெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்... கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால்,

அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோம.12:7-21). இவையெல்லாம் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவீர்களென்றால் இவைகளைக் கைக்கொள்ளவேண்டும். வேதம் அவ்வாறே போதிக்கிறது. இவைகளைச் செய்தால் உங்கள் மனம் புதிதாகிறது, நீங்களும் மறுரூபப்படுவீர்கள்.

நீங்கள் மறுரூபப்பட பழையவைகள் சாகவேண்டும் அல்லது களையப்பட வேண்டும். "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே. கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்கிறார் பவுல் (கலா.2:19,20). கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டவர்களாக இருக்கிறீர்களா? அப்படி அறையப்பட்டவர்களாக இருப்பீர்களென்றால், உங்களுக்குள்ளே கிறிஸ்துவே வாசம் செய்யவேண்டும். பழையவைகள் ஒழிந்து போயிருக்கவேண்டும். "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே.4:22-24)

அன்பான சகோதரனே சகோதரியே, உலகத்திற்கு ஒத்த வேஷம்தரியாமல் தேவனுடைய சித்தம் இன்னதென்பதை வேதவாக்கியங்களுடன் பகுத்து ஆராய்ந்து அறிந்து, ஒவ்வொருநாளும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் உங்களோடிருந்து பெரிய காரியங்களைச் செய்வாராக!

**வாழ்க்கையானது**
**மூன்று பிரதிகளிலுள்ள ஒரு புத்தகம்**

*கடந்த காலம், நிகழ் காலம், வரப்போகும் காலம்.*

- ★ *கடந்த காலம் எழுதப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது*
- ★ *நிகழ் காலம் நாம் ஒவ்வொரு நாளும் எழுதிக்கொண்டிருப்பது*
- ★ *மூன்று பிரதிகளின் கடைசியும் சிறந்ததுமானது பார்வையிலிருந்து அடைபட்டுள்ளது*

*தேவன் திறவுகோலை கொண்டுள்ளார்.*

# நாம் ஏன் ஆராதிப்பதற்குக் கூடுகிறோம்
## Why We Meet For Worship

*J.C.Choate*



நாம் கிறிஸ்தவராயிருப்பதினாலும், கிறிஸ்துவின் சபை கூட்டத்தாராயிருப்பதினாலும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல்நாள் தோறும் கூடுகிறோம். நாம் இவ்வாறு செய்வதற்கு பல காரணங்கள் உண்டு.

இக்காரணங்களை ஆராய்வதற்கு, ஒரே தேவனும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவும் உண்டு என்று நாம் அறியவேண்டியது அவசியம். அவர் நமது சிருஷ்டிகரும் நாம் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் அருளிச் செய்கிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினிமித்தம், அவருடைய குமாரனாகிய இயேசுவை உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி அனுப்பி, நாம் இரட்சிக்கப்படும் பொருட்டு தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் நமக்காக இதை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றபடியினால், அவருக்காக ஜீவிக்கவும், அவரை சேவிக்கவும், அவர் வழிநடத்துகிறபடி அவரை ஆராதிக்கவும் விரும்புகிறோம். கிறிஸ்து, “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்” (யோவா.4:24). நாம் சேவிக்கிற தேவன் ஒரு மனிதனல்ல, ஒரு மிருகமல்ல, அல்லது ஒரு உயிரற்ற பொருளல்ல. அவர் சூரியனுக்கோ, சந்திரனுக்கோ அல்லது நட்சத்திரங்களுக்கோ, ஒரு நதிக்கோ, ஒரு மலைக்கோ அல்லது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு விக்கிரகத்திற்கோ ஒப்பானவரல்ல. அவர் ஆவியாயிருக்கிறார், சகலத்தையும் உண்டாக்கியவர், வாழ்வில் ஆதரிக்கிறவரும், அழிவில்லாமலிருக்கச் செய்கிறவருமாயிருக்கிறார். மதிகேடன் மட்டுமே அவர் இல்லையென்று சொல்லுவான் (சங்.14:10).

நாம் பங்குகொள்கிற தொழுகையில் பரலோகத்தின் தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்படுகின்ற ஆராதனை, துதி மற்றும் கனம் போன்றவைகள் சம்பந்தப்பட்டுள்ளன. நம்முடைய தொழுகை ஆவியினால் செய்யப்படுகிறது. அதாவது, நாம் இதை எல்லா உண்மையோடும், தாழ்மையோடும், நாம் செய்கின்ற தொழுகையில் முழு கவனம் கொண்டிருப்பவர்களாகவும் செய்கிறோம்.

நாம் உண்மையோடும் நம்முடைய தொழுகையைச் செய்கிறோம். அதன் பொருள், சத்தியத்தின்படி அல்லது தேவன் தம்முடைய வார்த்தையில்

கூறியிருக்கிறபடி நாம் தேவனைத் தொழுது கொள்கிறோம் என்பதாகும். நாம் தொழுதுகொள்ளுகிற தேவன் ஒருவரே மேலும் நாம் நம்மைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறோம்.

அதன் பொருள், நாம் மனுஷருடைய கோட்பாடுகளின்படியும் கட்டளைகளின்படியும் தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாய் இல்லை (மத்.15:9). நீங்கள் அறியாமல் அவரைத் தொழுதுகொண்டால், அவர் பிரியப்படுத்தப்பட்டாலும் அல்லது நாம் எப்படித் தொழுதுகொள்கிறோம் என்பது ஒரு பெரியகாரியமில்லையென நாம் காலமெல்லாம் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கிறோம் என நாம் காரணம் காட்டினாலும் அதனால் ஒன்றுமில்லை. இது நாம் தொழுதுகொள்ளுகிற விதத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது இல்லாவிட்டால் தேவன் இந்தக் காரியத்தில் அவர் பேசியிருக்கமாட்டர்.

வேதாகமம் போதிக்கின்றபடி வாரத்தின் முதல்நாள் தோறும் கிறிஸ்தவர்களாகிய நாம் கூடி ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.இதற்கான திருஷ்டாந்தத்தை அப்போஸ்தலர்20:7-ல் நாம் பெற்றிருக்கிறோம். நாம், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" என வாசிக்கிறோம். பழைய ஏற்பாடு சட்டத்தின் கீழ், ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாயிருந்தது. ஆனால் கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து தம்முடைய சொந்தக்கட்டளையினால் அதை மாற்றிப் போட்டார் (கொலோ.2:14). அந்த பழைய கட்டளையை எடுத்துப்போட்டதின் மூலம் ஆராதனைக்குரிய நாளாயிருந்த ஏழாம் நாளும் எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து கல்லறையிலிருந்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார் என வாசிக்கிறோம் (28:1-6). அதைப்போல சுவிசேஷமும் வாரத்தின் முதல்நாளிலே முதல்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டு, அதே நாளில் சபையானது தன்னுடைய ஆரம்பத்தைப் பெற்றது (அப்.2). முடிவாக, பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் தங்களுடைய வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கும்படிக்கு அவர்களுக்கு எழுதினார். ஆனால் சிலர், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவரும்படி எந்த ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை எனச் சொல்லலாம். பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழிருந்த மக்கள் ஒவ்வொரு ஏழாம்நாளையும் அனுசரிக்கவேண்டுமென அவர்களுக்கு தேவன் சொல்லவில்லை. உண்மையென்னவென்றால், ஒவ்வொரு வாரத்திலும் வாரத்தின் முதல்நாள் உண்டு. வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாளாயிருக்குமானால், ஆராதனைக்குரியநாளாயிருக்குமானால் பிறகு கிறிஸ்தவர்கள் இதன் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரவேண்டியவர் களாயிருக்கிறார்கள்.

எபிரெய ஆசிரியர் நாம் சபைகூடிவருதலை விட்டுவிடக்கூடாதென்கிறார். அவர் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகிறபடி, “அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்” (எபி.10:23-27). நாம் ஒருவருக்கொருவர் கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டுமென அவன் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். அவர் எதைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்? நல்லது, நாம் விட்டு விடாதபடிக்கு ஒழுங்கின் அடிப்படையில் நாம் கொண்டுள்ள சபை எது? அவன் சிலர் அதை விட்டு விலகிக்கொண்டிருந்தார்களென சொன்னான், ஆனால் அவர்கள் செய்தது போல நாம் செய்யக்கூடாது. மாறாக, நாம் ஒருவரை ஒருவர் கவனித்து, அல்லது ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, நாளானது சமீபித்து வருகிறதைப் பார்த்து சபை கூடிவரவேண்டுமெனச் சொல்கிறார். ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்த போதிலும்கூட தொடர்ந்து மனதார நாம் பாவஞ்செய்வோமானால் நாம் தொடர்ந்து நம்முடைய பாவத்தில் நிலைத்திருக்கையில் கர்த்தர் நம்மைக் காப்பாற்றமுடியாதென்று சொல்ல அவர் துரிதப்படுகிறார். ஆனபடியினால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறது என்பது மட்டுமல்ல ஆனால் சபைக்கூடிவருவதில் இணைந்திருக்கிறதான அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவது என்பதும் முக்கியமானதாகும்.

இப்பொழுது தேவனுக்கு ஆராதனை ஏறெடுக்கையில் வாரத்தின் முதல் நாள்தோறும் நாம் என்னசெய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்? வேதவாக்கியத்தில் பல காரியங்களி பட்டியலிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்20:7-ல் குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படிக்கு அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்படிக்குக் கூடினார்கள். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல், “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை

நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் காத்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து; இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னைத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி.11:23-29). கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி அப்பம் பிட்கப்பட வேண்டியிருந்தது. கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படி பானம் பண்ணப்படவேண்டியிருந்தது என பவுல் சொன்னதை தயவுசெய்து கவனியுங்கள். வேறுவார்த்தைகளில் கூறுவோமென்றால், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கிரயமாக செலுத்தப்பட்டதை தம்முடைய ஜனங்கள் தொடர்ந்து நினைவுகூரும்படி விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது கிறிஸ்தவர்கள் மீண்டும் சிலுவையை நோக்கிப் பார்க்கிறார்கள். இதைச் செய்யும்போது அவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே கர்த்தருடைய பந்திமிகவும் முக்கியமானதாகும். இது ஆவிக்குரியவகையில் கர்த்தருக்கு முன்பாக தான் எந்நிலையில் இருக்கிறோமென தன்னுடைய சொந்த வாழ்க்கையை சீர் தூக்கிப்பார்பதற்கான ஒரு தருணமாயிருக்கிறது. இவ்வாறே இது கிறிஸ்துவைக் குறித்த சில மதிப்புமிக்க பாடங்களை உலகத்திற்கு உபதேசிக்கும் வாய்ப்போடேகூட கிறிஸ்தவர்களை வரவேற்கிறது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதிக்கும்படிக்கு கூடிவரவேண்டியவர்களாயிருக்கின்றனர். மேலும் அவ்வாறு அவர்கள் செய்கையில் சேமித்துவைக்க அல்லது தன்தன் வரவுக்குத் தக்கதை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அவருக்குக் கொடுக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். பவுல், "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து, நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி.16:1,2) என்றான். 2கொரிந்தியர்9:6,7-ல் பவுல், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க்கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என எழுதினார். நிச்சயமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று இயேசு சொன்னார் (அப்.20:35). பழைய கட்டளையின்கீழ் கர்த்தருடைய ஜனங்கள் தசமபாகம் அல்லது தங்களுடைய வருமானத்தில் 10-ல் ஒரு பகுதியினை கொடுக்க கட்டளையிடப்பட்டிருந்தனர், ஆனால் அந்த கட்டளை தொடர்ந்து நிலைநிற்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் பெற்றிருக்கிற செழுமைக்கேற்ப கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அது எவ்வளவு? சந்தேகமேயில்லை, அது பத்தில் ஒரு பகுதியை விட அதிகம். நிச்சயமாகவே நாம் கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்துவந்தவர்களைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறோம்.

நாம் தேவனை துதிப்பாடல்களினால் பாடி கீர்த்தனம்பண்ணும்படிக்கு வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவரவேண்டிவர்களாயிருக்கிறோம். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றார். கொலோசெயர்3:16,17-ல் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன்பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என பிரகடனப்படுத்தினான். இந்த வசனங்களிலும் மற்ற பகுதிகளிலும் நீங்கள் காண்கையில், தேவனைத் துதித்து பாடுவதை முக்கியப்படுத்துகிறது. எபிரெய ஆசிரியர் நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை கர்த்தருக்கு ஏறெடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபி.13:15) என்கிறார். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் ஆராதனையில் வாத்தியக் கருவி இசையை பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஆராதனையில் வாத்தியக்கருவி இசையினைப் பயன்படுத்துவதால் என்ன தவறு? இது குறித்த நன்மை என்ன? வெறுமனே பாடுவது மூலம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் முடியுமென நீங்கள் அறிவீர்கள். ஆனபடியினால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கிறபடி நாம் பாடக்கடவோம். இதற்குமேல் செல்லும்போது அது கர்த்தருடைய வெறுப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும்.

கடைசியாக, கிறிஸ்தவர்களாகிய நாம் வாரத்தின் முதல்நாள்தோறும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் நம்முடன் பேச அனுமதிக்கும்படி

ஆராதிக்கிறவர்களாயிருக்கிறோம், மேலும் அத்தோடுகூட நாமும் நம்முடைய ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசுகிறவர்களாயிருக்கிறோம். நாம் 2தீமோத்தேயு2:15-ஐ வாசிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறோம். கிறிஸ்து நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார் (யோவா.5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள் "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42). நாம் வேத ஆராய்ச்சியில்லாமலும் ஜெபமில்லாமலும் நாம் எவ்வாறு அநேகமாக ஆராதிக்க முடியும்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? நீங்கள் முறைப்படி ஆராதிக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் கிறிஸ்தவரல்லவென்றால், நீங்கள் தேவனோடு ஒரு சரியான உறவில் இல்லை ஆகவே நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் அவரை ஆராதிக்க வேண்டும். நான் நீங்கள் கிறிஸ்தவராக மாறும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கிறிஸ்து, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்.16:16) என்றார். நீங்கள் அதைச் செய்தால், கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன்பின் நீங்கள் தொழுது கொள்ளமுடியும்.





'The One Way' வேதபாடம்
The Master Course -ஐ அஞ்சல் வழி மூலம் படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**


### ஜெபியுங்கள்

- ✦ விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் ஊழியம் செய்து வந்த சகோ. காளப்பன் விசப்பூச்சி கடித்து இறந்து விட்டார். அவர் நம்மோடு ஊழியத்தில் அதிகமாக ஒத்துழைத்தவர். அவரை இழந்து வாடும் குடும்பத்திற்காகவும் சபைக்காகவும்...
- ✦ இந்ததோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் தங்களுடையவர்களை இழந்த குடும்பத்தி னருக்காக...






# ஒரு சிறிய ஊசியினால்...

## With a Small Needle...

*J.Glory Arjunan*



'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது தமிழ் பழமொழி. உண்மைதான்! தங்களிலிருந்த சிறிய காரியங்களைக் கொண்டு பெரிய காரியங்கள் நடைபெற காரணமாயிருந்த அநேக சகோதரிகளை நம்முடைய வேதாகமம் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அநேகர் தங்களிடமிருந்த கொஞ்சப் பொருளை தேவ சித்தம் நிறைவேற பயன்படுத்தி பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். அப்போஸ்தலர்9:36- ஒரு அருமையான சகோதரியை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த ஸ்திரீ தன்னுடைய சிறிய ஊசியினால் பெரிய காரியத்தை தேவநாம மகிமைக்காக செய்தவள். இவள் பெயர் தொற்காள். யோப்பா பட்டணத்தில் வாழ்ந்து வந்த ஒரு சீஷி. இயேசுவுக்கு சீஷிகள் அநேகர் இருந்தனர். தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து வந்த யோவன்னாள், சூசன்னாள் போன்றவர்களைப் பற்றி நாம் அறிவோம். இவர்களைப் போல இந்த தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் சீஷியாக இருந்துகொண்டு இயேசுவின் குணாதிசயங்களை வெளிப்படுத்திவந்தாள்.

தபீத்தாள் என்றால் 'Gazelle' என்று பொருள். இந்த 'Gazelle' என்ற ஆங்கில வார்த்தைக்கு அகராதி 'வேகமாக ஓடக்கூடிய ஒருவகை அராபிய மான்' என விளக்கமளிக்கிறது. நம்மில் அநேகர் மானினுடைய சாந்தமுள்ள கண்கள், மெல்லிய ஒல்லியான கால்கள், அதனுடைய வசீகரமான மற்றும் வேகமான ஓட்டம் போன்றவற்றையெல்லாம் ரசிக்கின்றோம். இந்த அர்த்தமுடைய பெயரை தரித்திருந்த இந்த தபீத்தாள் மான்களுக்குரிய இந்த குணாதிசயங்களில் ஏதேனும் ஒன்றினைப் பெற்றிருந்தாளா? அவளைக் குறித்து வேதம் '...அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்துகொண்டு வந்தாள்' எனக் கூறுகிறது (வச.36). இவள் விதவைகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்துகொண்டு வந்திருக்கிறாள். அப்படியானால் இவளுக்கு குடும்பமிருந்ததா? இவள் திருமணமானவளா? இவளுக்குப் பிள்ளைகளிருந்தார்களா? இவள் வயது சென்றவளா? இதைப்பற்றியெல்லாம் வேதம் நமக்குத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவள் இயற்கையான மரணம் எய்யவில்லை. இவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள் என வேதம் கூறுகிறது

(வச.37). எனவே அவள் தன் இளம்வயதில் மரித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவள் மரணமடைந்தபின் அவளுடைய மகிமை வெளிப்படுகிறதை பின்னுள்ள வசனங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். "...விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து..." (வச.39) என வாசிக்கிறோம். இவளுடைய வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

**1. தொற்காள் தன்னுடைய தாலந்தை தேவனுக்காகப் பயன்படுத்தினாள்:**

தன்னுடைய சிறிய ஊசியினால் அங்கிகளையும், வஸ்திரங்களையும் பின்னி விதவைகளுக்கும் எளியவர்களுக்கும் அவைகளைக் கொடுத்து உதவிசெய்திருக்கிறாள். தன்னைச் சுற்றியிருந்த ஜனங்களுக்கு உதவிசெய்திருக்கிறாள். பவுல் கொலோசெயருக்கு, "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ.3:23,24) என்று எழுதினார். இந்த தபீத்தாள் ஒரு சீஷியாக இருந்தாளென நாம் வாசித்தோம். எனவே பவுல் கூறியதைப்போல கிறிஸ்துவுக்கு சீஷியாக இருந்ததினிமித்தம் சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோமென்று அறிந்து கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்திருக்கிறாள். ஆம், அன்பான சகோதரிகளே, இவள் ஜீவியம் நமக்கு சிறந்த எடுத்துக்காட்டல்லவா? இயேசுவுக்கு சீஷியாகமாறின நீங்களும் நானும் இந்த சிந்தனையுள்ளவர்களாயிருக்கிறோமா? வரப்போகிற சுதந்தரமாகிய பலனை எண்ணி நன்மைசெய்கிறோமா? இவ்விதமான கேள்வி கேட்டாலே சிலர் சலித்துக்கொள்ளுகின்றனர். எங்கே எனக்கே ஒன்றுமில்லாதிருக்கையில் நான் எப்படி மற்றவர்களுக்கு உதவுவது என்பர். இவள் தன்னிடமிருந்த சிறிய ஊசியைக் கொண்டு தானே இந்த நற்கிரியைச் செய்தாள். அப்படியானால், நாம் நம்மிடமுள்ள சிறிய தாலந்துகளைப் பயன்படுத்தி கர்த்தரை பிரியப்படுத்தக் கூடாதா? அன்பு சகோதரியே, உங்களை நீங்களே வருத்திக்கொள்ளாதீர்கள். தேவன் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகளைக் கொடுத்துள்ளார். ஏதோ பெரிய டாக்டராகவோ, எஞ்சினியராகவோ அல்லது பெரிய அந்தஸ்தோடே பணபலமிக்கவராகவோ இருந்தால் தான் மற்றவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்று சொல்லி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தைப் புதைத்துப்போட்டு விடாதீர். இருக்கிற சிறிய தாலந்தை எவ்வாறு கர்த்தருக்கென்று பயன்படுத்தலாம் என்று சிந்தித்துப்பாருங்கள். சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை தன்னிடமிருந்த கொஞ்சமாவையும் எண்ணெயையும் கர்த்தருக்கென்ரு பயன்படுத்தினாள். அதனால் பஞ்சகாலமெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டாள். கர்த்தருக்கென்று ஒரு காரியத்தைச் செய்யும் போது மிகுந்த பலனைப் பெறுவோம்.

**2. தொற்காள் ஒரு பணிவிடைக்காரி:**

இவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் என வசனம் 36-ல் வாசிக்கிறோம். நற்கிரியைகளையும், தருமங்களையும் சாதாரணமாகச் செய்யவில்லை மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள் என வாசிக்கிறோம். இங்கே கவனியுங்கள்: அவள் வசூல் செய்து தானதர்மம் பண்ணினாளா? இல்லை. தன் சொந்தக் கைகளினால் வேலை செய்து, அதிலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து மிகுதியாய் செய்தாள். உங்களுடைய தானதர்மம் எப்படிப்பட்டது? பவுல், "... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி.15:56) என்று எழுதுகிறார். கர்த்தருக்குப் பணிவிடைசெய்கிற சகோதரியே, கர்த்தருக்குச் செய்கின்ற கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாக, எச்சூழ்நிலையிலும் சோர்ந்து போகாது செய்கிறீர்களா? இல்லை, நமக்கொரு வெற்றி, நமக்கொரு பெரிய ஆசீர்வாதம், நமக்கொரு உத்தியோகம் கிடைத்தால் மட்டும் கர்த்தரை நினைத்து அவருடைய கிரியைகளில் ஈடுபடுகிறோமா? எல்லாமே எனக்குக் கிடைக்கவேண்டும், மகளுக்குத் திருமணமாக வேண்டும், மகனுக்கு வேலை கிடைக்க வேண்டும், நோய் குணமாகவேண்டும், இவையெல்லாம் இருந்தால் தான் கர்த்தருக்கடுத்த செயல்களில் ஈடுபடுவேன் என்கிறீர்களா? இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மட்டும் கர்த்தரை பின்பற்றுவீர்களானால் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவீர்கள். இந்த தபீத்தாளுக்கோ எந்த உறவுமிருந்ததாக வேதம் கூறவில்லை. இவளுக்கு ஆதரவாகவும், உதவியாகவும் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் நற்கிரியை செய்வதிலும், தருமங்கள் செய்வதிலும் எப்பொழுதும் பெருகுகிறவளாயிருந்திருக்கிறாள். "...நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக் கடவோம்" (கலா.6:10) என்ற வசனத்திற்கேற்ப தனக்குக் கிடைத்த சமயத்தையும் சூழ்நிலையையும் இவள் பயன்படுத்திக் கொண்டாள்.

**3. அறியப்பட்டவர்களால் நேசிக்கப்பட்டாள்.**

தபீத்தாள் செய்த உதவியினிமித்தம் அவளால் அறியப்பட்ட விதவைகள் தபீத்தாள் மரணமடைந்ததும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து பேதுருவை சூழ்ந்து நின்றார்கள் என வசனம் 39-ல் வாசிக்கிறோம். அவளுடைய பிரிவை அந்த விதவைகளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவே அவர்களெல்லாரும் பேதுருவிடம் எல்லாவற்றையும் காண்பித்து அழுதிருக்கிறார்கள். நமக்கு அன்பான அருமையான ஒருவரை நாம் மரணத்தின் மூலம் இழக்கும்போது நாமும்கூட அவர்கள் உயிரோடிருந்தபோது செய்த நற்காரியங்களைச் சொல்லி அழுகிறோமல்லவா? ஏன்? நாம் அவர்களிடம் கொண்ட அன்பு அவ்வாறு நம்மைச்

செய்யத் தூண்டுகிறது. தபீத்தாள் மீது கொண்ட அன்பு, தபீத்தாள் அவர்களுக்குச் செய்த உதவியினால் வந்தது. எனவே அதையெல்லாம் காண்பித்து அழுதார்களென வாசிக்கிறோம். வல்லமையுள்ள தேவனோ பேதுருவைக்கொண்டு இந்த தபீத்தாளை உயிரடையச் செய்தார். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தபோது அநகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அன்பு சகோதரியே, தபீத்தாளிடமிருந்த அந்த சிறிய ஊசி எப்பேர்பட்ட காரியத்தைச் செய்துள்ளது! இவளுடைய ஜீவியம் நமக்கு ஒரு நல்மாதிரி அல்லவா! தேவனால் உண்டாக்கப்பட்ட அவருடைய ஜனங்களாகிய நாமனைவரும் ஒரு சில தாலந்துகளை நிச்சயமாகவே பெற்றிருக்கிறோம். நாம் செய்யவேண்டிய பணிகள் அதிகம். இந்தப்பணிகளைச் செய்யவேண்டியது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்திற்கேற்ப நாம் என்ன செய்யவேண்டுமென சிந்திப்போம். கர்த்தர் தாமே தம்முடைய சித்தத்தின்படி அவருடைய கிரியையிலே நாம் பெருகும்படி நமக்கு உதவிசெய்வாராக!

## நான் கிறிஸ்தவத்தைக் குறித்து அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா?

## *Am I Serious About Christianity?*

★ என்னுடைய ஜீவியம் தேவனை மகிமைப்படுத்தி மற்றவர்களும் தேவனை மகிமைப்படுத்த காரணமாயிருக்கிறதா (மத்.5:13-16) அல்லது நான் அவரை வெட்கப்படுத்துகிறேனா?

★ நான் தேவனுடைய ஊழியக்காரியாயிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேனா (பிலி.3:1; 4:4) அல்லது நான் செய்கிற ஊழியத்தைக் குறித்து ஆத்திரமடைகிறேனா?

★ நான் என்னுடைய சத்துருவைக்கூட நேசிக்கிறேனா (மத்.5:44)?

★ நான் ஒரு அநுதின வேதவாசிக்கிறவளாக, தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்வது பற்றி அதிக அக்கறையுள்ளவளாயிருக்கிறேனா (அப்.17:11)?

★ என்னுடைய ஜெபஜீவியம் தேவனிலுள்ள என்னுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறதா (மத்.6:5-15)?

★ நான் இயேசுவுக்காக ஒரு ஆத்துமாவையாவது எப்போதாவது ஆதாயம் செய்திருக்கிறேனா (2தீமோ.2:2)?

★ நான் யாருக்காவது சுவிசேஷத்தை போதித்து அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறேனா (தீத்.2:11-15)?

★ நான் பாவங்களுக்காக மனந்திரும்பி நம்முடைய கிறிஸ்துவுக்கு விரோதமான மனநிலைகளையும் கிரியைகளையும் சரிசெய்ய மனமுள்ளவளாயிருக்கிறேனா (அப்.17:30,31)?

-மாற்கு ஷெர்ஃபீல்டு

The Voice of Truth International

பாடம் - 5

# சபையில் போதகர்கள்

## Teachers in the Church

J.C.Choate

இதுவரை சபையில் மூப்பர்கள் உதவிக்காரர்கள் மற்றும் பிரசங்கியார்கள் மேலும் சபையில் அவர்களுடைய தலைமைத்துவப் பங்கு என்ன என்பதைக் குறித்துப் பார்த்தோம். ஒவ்வொருவருக்கும் செய்யும் படியாக மிக முக்கியமான வேலை உண்டு. இதை நாம் மறக்க விரும்பவில்லை. மூப்பர்களும் உதவிக்காரர்களும் சபையினுடைய அமைப்பிலே மனுஷீகமான பங்கை வகிக்கிறார்கள். அதே சமயம் பிரசங்கியார்கள் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதிலே விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக சபையிலே தலைமைத்துவம் உள்ள பொறுப்பு போதகனாயிருப்பது. இந்த வேலை பிரசங்கியாருடைய வேலை போன்றதே ஆனால் இது அநேக சபை அங்கத்தினர்களை ஒருங்கிணைத்து செயல்பட வேண்டியதொன்றாகும். ஒருவேளை இதை சிறப்பாகச் சொல்வதென்றால் எல்லா பிரசங்கியும் போதகர்களே. ஆனால் எல்லா போதகரும் பிரசங்கியார் அல்ல ஆண்கள் மட்டுமே பிரசங்கியாராகத் தகுதி பெற முடியும் ஆனால் ஆண்களும், பெண்களும் போதிக்கவர்களாக இருக்க முடியும். இது நாம் தொடர்ந்து படிக்கும் போது விளக்கப்படும்.

பொதுவாக சபையார் எல்லோரும் சேர்ந்திருக்கும்போது பிரசங்கம் செய்யப்படும். ஆனால் வகுப்பறையிலே தனிப்பட்ட முறையில் (ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ) போதிக்கப்படும். இவை இரண்டுமே வேத வசனங்களில் மிக தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. சான்றாக, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தேகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் பெரும் திரளான மக்களுக்குப் பிரசங்கித்தார்கள். குறிப்புகளிலே பார்க்கும்போது கேட்டவர்களில் மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்படிந்தார்கள் (ஞானஸ்நானம்) என்று பார்க்கிறோம் (அப்போஸ்தலர் 2:41). தனிப்பட்ட வகையில் போதிப்பதற்குச் சான்றாக ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அப்போல்லோவை தனியே அழைத்துக் கொண்டு போய் அவனுக்கு தேவனுடைய வார்த்தையை மேலும் சரியாக போதித்தார்கள் (அப்போஸ்தலர் 18:24-28).

உலகத்திலே கர்த்தருடைய சபையானது துவங்கும்போது, விசேஷமாக சபையானது பலமுள்ளதாக இல்லாத பட்சத்தில் அதன் தொழுகைகளை சிறிய வீட்டிலோ அல்லது கூடத்திலோ நடத்துவார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரசங்கம் போதிக்கிற முறையிலே செய்வார்கள். ஆனால் சபை வளர்ச்சி அடைந்தபோது அங்கே பிள்ளைகளோடு கூட குடும்பங்களும் அமர்ந்து கேட்கும்போது பிள்ளைகளை தனியே ஒருவகுப்பறையில் அமரச்செய்து அவர்களுக்கு போதிப்பது சரியான முறையாகும். ஒன்றுக்கும் மேற்பட்ட வகுப்புகள்

சிறுவர்க்காக நடத்தலாம். சபையிலே போதுமான இடவசதிஇருக்குமானால் வாலிபர்களுக்கு உரிய வகுப்பு, பெண்களுக்கான வகுப்புகள் பெரியவர்களுக்கான வகுப்புகள் கூட நடத்தலாம். இந்த விதமான அமைப்பிலே சிறுவர்கள் வகுப்பை ஒரு ஆணோ, அல்லது பெண்ணோ நடத்தலாம், ஆனால் அநேக சமயங்களில் இந்த விதமான வகுப்புகளை பெண்களே நடத்துகிறார்கள். ஒரு பெண் பெண்களுக்கான வகுப்பை நடத்தலாம். வளர்ந்த ஆண்களும், பெண்களும் கலந்த ஒரு வகுப்பை ஒரு ஆண் (இரட்சிக்கப்பட்ட) மட்டுமே நடத்த வேண்டும். எல்லா வயதினரும் சத்தியத்தில் வளரும்படியாக இதுபோன்ற வகுப்புகள் அவசியமானதே, எல்லா வயதினரும் ஒன்றாக கூடும்போது கற்றுக்கொள்ளும்படியாக எல்லாருடைய ஆர்வத்துக்கும் ஏற்றாற்போல் ஒரு போதகரோ அல்லது பிரசங்கியாரோ ஒரு குறிப்பிட்ட போதனையினால் அவர்கள் எல்லாரையும் திருப்தி செய்வது கடினம்.

தேவனுடைய வார்த்தை போதிக்கப்படும்போது அதனுடைய தாக்கம் எல்லாருடைய மனதிலும் மிகப்பெரிய அளவில் இருக்கும்படியாக அவைகளை வகுப்புகளாகப் பிரித்து நடத்துவது அவசியம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் போதிக்கிறவர் அந்தந்த வயதினருக்கு ஏற்றாற்போல் போதிக்கலாம். இது கல்வித்துறையில் இருக்கிறர்வளுக்குத் தெரிந்துதான் பள்ளிகளிலே வகுப்பு வகுப்பாகப் பிரித்து நடத்துகிறார்கள்.

வகுப்புகளாக நடத்தும் சூழ்நிலையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதிக்கின்ற வாய்ப்பு இருப்பது மட்டுமல்லாமல் வீடுகளிலும் தங்கள் நண்பர்களுக்கு தனிப்பட்ட முறையில் போதிக்கலாம். அநேகர் பிரசங்கிப்பதில் உள்ள ஆர்வத்தை சொல்லுகிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையிலோ அல்லது வகுப்பறையிலோ போதிப்பது குறித்து ஆர்வம் காட்டுவதில்லை. இது ஒரு வகையான சேவை மட்டுமே, முக்கியமானதென்றும் மற்றவை அப்படியல்லவென்றும் நினைக்கும்படியாக இருக்கிறது. உண்மையாகவே முடிவில் பார்த்தால் பிரசங்கிப்பதை விட போதிப்பதே அதிக முக்கியத்துவம் உள்ளதாக உள்ளது. போதிப்பது போலல்லாமல் ஒரு கூட்டத்தாருக்குப் பிரசங்கிப்பது என்பது ஒரு வரையறைக்குட்பட்டதாகவே இருக்கும். ஒரு வகுப்பறையில் அல்லது ஒருவருக்கு தனியாக போதிக்கையில் ஆசிரியர் அவர்களுக்குள்ள பிரச்சனைகள் கேள்விகள் போன்றவற்றை தெளிவாக கையாள முடியும். பெரிய சபைகளிலே அதனுடைய பலம் அவர்களுக்கு வகுப்பறையில் போதிக்கப்பட்டதாகவே இருக்கிறது.

போதகராக இருப்பதிலே பல சாதகங்கள் இருக்கின்றன. சபையினுடைய எல்லா அங்கத்தினர்களும் ஏதாவதொரு நிலையில் போதிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் யாரிடத்திலும் பண உதவிபெறாமல் செய்ய முடியும். வேறு வார்த்தையில் இதைச் சொல்வதென்றால் ஒருவர் தங்கள் வாழ்க்கைக்காக வேறு வேலை செய்து கொண்டே கர்த்தருடைய நாளில் ஏதாவதொரு வகுப்பில் போதிக்கலாம். அவர் மேலும் தனிப்பட்ட வேலைகளைச் செய்யலாம். வேலை செய்கிற இடத்தில் நண்பர்களுக்கு போதிக்கலாம். கைப்பிரதிகள் மூலமாக போதிக்கலாம்,

அவர்களுடைய நல்ல வாழ்க்கையின் மூலம் போதிக்கலாம். நோயாளிகளைச் சந்திக்கலாம். இந்த விதமான அநேக வழிகளில் போதிக்கலாம். பவுல் சொல்லுகிறபடி சபையிலே ஒருவர் மூப்பராய் இருப்பதற்கான தகுதிகளில் சரியாக போதிப்பதும் ஒன்று (1 தீமோத்தேயு 3:2). அதாவது ஒருவர் தேவனுடைய வார்த்தையை பொதுக் கூட்டங்களிலும், பிராந்திய சபையிலும் மூப்பராக இருக்கும்படி போதிக்க வேண்டும். போதிக்கிற திறமை ஒருவருக்கு இல்லாத பட்சத்தில் அவர் எப்படி இப்படிப்பட்ட பொறுப்புகளில் இருப்பதை நினைக்க முடியும். அது கூடாத காரியமாக இருக்கும். மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது (2 தீமோத்தேயு 2:1-2) தேவனுடைய சத்தியத்தைப் பொறுத்த வரையில், கிறிஸ்தவர்களுக்கு அதுவே முக்கியம். நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு சத்தியத்தை, அவர்கள் மற்றவர்களுக்கு போதிக்கும்படியாக போதித்துக் கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களாக இருக்கிற நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளரும்படி தேவனுடைய சித்தத்தை நமக்காகக் கற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் மற்றவர்களுக்கு அதை போதிக்கும் போதும் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளருகிறோம். மாணவனை விட ஆசிரியரே அதிகம் கற்றுக் கொள்ளுகிறார் என்பது பிரசித்தமான உண்மை. ஏனென்றால் தன்னுடைய மாணவர்களுக்கு போதிக்கும்படியாக தயாராக இருக்கும்படி முன்னமே வேதவசனங்களை கற்றிருக்க வேண்டும். ஆனால் ஒருவர் தான் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்கு போதிப்பதில் தவறு வாரானால் படிப்படியாக அவர் தான் கற்றுக்கொண்டதை மறந்து விடுவதோடு மற்றவர்கள் தனக்கு வேதத்தினுடைய ஆரம்ப மூல உபதேசங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டிய நிலைக்கு வரக்கூடும். இதைக்குறித்து எபிரெய புத்தக எழுத்தாளர் இவ்விதமாக சொல்லுகிறார்: "காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதா யிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர் களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனா யிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங் களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரேயர் 5:12-14). இது ஒருவர் தன்னை மிகுந்த துக்கமான நிலையில் காணக்கூடியதாகும். தயவு செய்து இந்த நிலை உங்களுக்கு நேரும்படி விட்டுவிடாதீர்கள்.

கர்த்தருக்கு போதகர் அநேகர் தேவை. இதுவரையில் நீங்கள் கர்த்தருக்குக் கீழ்படியாதிருந்தால் கீழ்படியும்படி வேண்டுகிறேன். கர்த்தருடைய சித்தத்தை நன்கு கற்று மற்றவர்களுக்கு அதை போதியுங்கள்.

தீமையை வெறுக்காதவன்
நன்மையை விரும்பான் - *Selected*

# பேசும் வேதாகமம் — 19

★ பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் யாருமல்ல? - மனுபுத்திரனும் அல்ல - எண்.23:19.

★ உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்யச் சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் என்னசெய்யா திருப்பீர்களாக? - சாயாதிருப்பீர்களாக - உபா.5:32.

★ நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றவன் யார்? - கிதியோன் - நியா.8:23.

★ ஏலியின் குமாரர் எம்மக்களாயிருந்தார்கள்? - பேலியாளின் - 1சாமு.2:12.

★ உறைந்த மழைபெய்த நாளில் ஒரு கெபிக்குள்ளே இறங்கிப்போய் ஒரு சிங்கத்தைக் கொன்றவன் யார்? - பெனாயா - 1நாளா.11:22.

★ நீங்கள் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால், நம்முடைய தேவனுக்கு எப்படிப்பட்டவர்களாக மாறுகிறீர்கள்? - துரோகிகளாக - நேகே.13:27.

★ தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனுமா யிருந்தவன் யார்? - மொர்தெகாய் - எஸ்.10:3.

★ இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை, பொல்லாதவர்களுக்கு எது கொடுக்கிறதுமில்லை? - கைகொடுக்கிறதுமில்லை - யோபு8:20.

★ உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் என்னசெய்து கொண்டிருப்பார்கள்? உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள் - சங்.84:4.

★ மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் எப்படிப்பார்க்கிறார்? - சீர்தூக்கிப் பார்க்கிறார் - நீதி.5:21.

## சாலொமோன்

★ *மூவாயிரம் நீதிமொழிகள் எழுதினான்* — *1இரா.4:32*

★ *பாட்டுகள் ஆயிரத்து ஐந்து* — *1இரா.4:32*

★ *நாள் ஒன்றிற்குச் செல்லும் சாப்பாடு...* — *1இரா.4:22,23*

★ *நாலாயிரம் இரதக் குதிரைலாயங்களும்,* — *1இரா.4:26*

★ *ஆயிரம் மனைவிகள்* — *1இரா.11:3*

★ *தேவாலயம் கட்ட ஏழுவருஷம்* — *1இரா.6:38*

★ *அரமனை கட்ட 13வருஷம்* — *1இரா.7:1*

★ *2000 குடம் தண்ணீர் பிடிக்கும் தொட்டி* — *1இரா.7:23-26*

★ *இஸ்ரவேலை 40 வருஷம் ஆண்டான்* — *1இரா.11:42*

★ *முன்னும் பின்னும் சரியானவன் இல்லை* — *1இரா.3:12*

# நீங்கள் யார்?
## Who are you?

*Bro.John swatz*



சில நாட்களுக்கு முன் என்னுடைய நண்பர் ஒருவர் என்னை சந்திக்க எனது இல்லத்திற்கு வந்தார். அவருடன் மேலும் மூன்று புதியவர்கள் வந்திருந்தனர். சில சம்பிரதாய உரையாடலுக் குப்பின், புதிதாக வருகை தந்திருந்த நண்பர்களில் ஒருவர் என்னிடம் நீங்கள் எந்த சபையின் போதகர்? என்று கேட்டார். உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை என்று கூறினேன். இல்லை, சி. எஸ். ஐ., லுத்தரன், பெந்தெகொஸ்தே, செவன்த்டே, ஏ.ஜி, போன்ற சபைகள் உள்ளனவே இவைகளில் நீங்கள் எந்த சபையில் போதகர் என்று விளக்கமாகக் கேட்டார். நான் அவரிடம், உங்கள் கேள்விக்குப் பதில் கூறுவதற்கு முன், உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன் வேதாகமத்தில் நீங்கள் சொன்ன சபைகளைப் பற்றி ஏதாவது குறிப்பு உண்டா? அல்லது இப்படி பலவிதமான சபைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதா? அல்லது சபையைப்பற்றி என்னதான் கூறப்பட்டுள்ளது? என்று கேட்டேன். அவர் சிந்திக்கத் தொடங்கினார். அப்பொழுது நான், வேதாகமத்தில் ஒரே ஒரு சபையைப் பற்றிதான் கூறப்பட்டுள்ளது. அது கிறிஸ்து என்ற மணவாளனுக்கு மணவாட்டியான சபை (எபே.5:23,24,32) மத்தேயு16-ஆம் அதிகார வசனம் 18-ல் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். ரோமர்16:16-ல் கிறிஸ்துவின் சபையார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரோமாபுரியிலுள்ள கிறிஸ்துவின் சபை, எபேசுவிலுள்ள கிறிஸ்துவின் சபை, கொரிந்து பட்டிணத்தில் இருந்த கிறிஸ்துவின் சபை என்று கூறப்பட்டுள்ளதே தவிர, பலவிதமான பெயர்கள் சபைக்குச் சூட்டப்படவில்லை. எனவே குழப்பத்திற்கும் "எந்த சபை"? என்ற அர்த்தமற்ற கேள்விக்கும் இடமில்லை. எந்த ஊரில் உள்ள சபை? என்ற கேள்வியை மட்டுமே கேட்கக் கூடும்.

மேலும் ஒவ்வொரு ஊரிலும் இருந்த கிறிஸ்துவின் சபைக்கு வெவ்வேறு உபதேசங்கள் இருந்ததாக வேதாகமம் கூறவில்லை. எபேசிய கிறிஸ்துவின் சபைக்கு எழுதிய கடிதத்தில், 4:4-6 வசனங்களில் ஒரே என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பார்வை பெற்றுள்ள யாரும் படிக்க முடியும். பிறகு எப்படி தெளித்தல், ஊற்றுதல், மூழ்குதல் என்ற பற்பல ஞானஸ்நானங்கள் திருச்சபைக்குள் வந்தன? "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்" (1பேது.4:11) என்று வேதாகமம் கூறவில்லையா? வேதவாக்கியங்களில் காணப்படாத மனுஷருடைய பாரம்பரிய பழக்கங்களைப் பின்பற்றி மத்தேயு15:9-ல் கூறியுள்ளபடி வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுபோல

வேதவசனங்களின்படி அல்லாமல், ஒருவர் கிறிஸ்துவை ஆராதிப்பதினால் கிறிஸ்தவர் ஆகிவிடமுடியுமா? முடியாதே! மத்தேயு7-ஆம் அதிகாரம்21-ஆம் வசனம் முதல் 23-ஆம் வசனம் வரை கூறப்படுள்ள கண்டனச் செய்தி யாருக்கானது? அவர்களும் கிறிஸ்துவின் பெயரால்தான் எல்லாவற்றையும் செய்துள்ளார்கள். ஆனால், அவர்களுக்கு கிறிஸ்து கொடுக்கும் பெயர் அக்கிரமச் செய்கைக்காரர்கள்.

ஏன் இப்படி? வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பிதாவின் சித்தம் செய்யப்பட வேண்டும். அதற்கு வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும் (யோவா.5:39, அப்.17:11). நமக்கு அவர் அளித்த வாக்குதத்தம் நித்திய ஜீவன். அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அது தேவையில்லையென்று ஒருவர் எண்ணினால், அவர் கிறிஸ்தவராக இருக்க முடியாது. 1கொரிந்தியர்15:19-ல் கூறியுள்ளபடி இம்மைக்காக மாத்திரம் (பதவி, வேலைவாய்ப்பு, கல்வி, கல்யாணம், கல்லறை போன்ற இவ்வுலக வாழ்விற்காக) நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் ( இறை நம்பிக்கையற்றவர்கள், விக்கிரக ஆராதனைக்காரர்கள் மற்றும் கலாத்தியர்5:19-21 வசனங்களில் கூறப்பட்டுள்ள அத்தனை பாவங்களையும் செய்தவர்களைவிட) பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்". இந்த நிலைதான், மத்தேயு7:32-ல் சொல்லப்படுகிறது.

இங்கே வேறு ஒரு நிலையில் உள்ள சில மக்களைப் பற்றி சிந்திக்காமல் இருக்க இயலாது. இப்படிப்பட்டவர்கள் மிகவும் நற்குணசாலிகள். நன்மை செய்ய வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்கள். பக்தியின் வேஷத்தைப் பூண்டு கொள்ளாத மெய்யான பக்தர்கள். ஆனால் இவர்கள் வாழும் வாழ்க்கை கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் புதிய ஏற்பாட்டு சபை வாழ்விற்கும் முரண்பாடு உள்ளதாக இருக்கும். வேதவசனங்களை இவர்கள் பகுத்துப் படித்து புரிந்து கொள்ளாததுவே இதற்கு காரணம். இப்படிப்பட்ட மனிதர்கள் கிறிஸ்து இவ்வுலகில் ஊழியம் செய்த காலத்திலேயும் இருந்தனர். மத்தேயு22:29-ல் நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணம் கொள்ளுகிறீர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த உண்மை தங்களுடைய வாழ்விலும் உள்ளது என்று இவர்கள் அறிந்துகொள்ளும்போது சத்தியத்திற்கு மனப்பூர்வமாக கீழ்ப்படிவார்கள் என்பது 100 விழுக்காடு உண்மை. யோவான்8:32-ல் கூறியுள்ளதுபோல சத்தியத்தை அறியும்போது சத்தியம் இவர்களை விடுதலையாக்கும்.

வேதாகமத்தில் கிறிஸ்துவர்கள் என்ற பெயர் (அப்.11:26-ல்) சீஷர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் கிறிஸ்துவின் சீஷர்களாக வாழ்ந்து வருகிறீர்களா? ஆம் என்று கூறுவீர்களேயானால் நீங்கள் கிறிஸ்தவர்களே! அப்படியானால், நீங்கள் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறீர்கள் என்று பொருள் (யோவான்5:3). நாங்கள் எங்கள் பாரம்பரியத்தை பின்பற்றி வருகிறோம் என்று சொல்லுவீர்களேயாகில், அப்போஸ்தலனாகிய பேதுரு, உங்களைப்பார்த்து இப்படியாகக் கூறுகிறார். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின்

நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப்.2:38). ஞானஸ்நானம் அது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் அதனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் இருக்கவேண்டும். எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். எனவே சத்தியத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். வசனமே சத்தியம் (யோவான்17:17). சத்திய வசனத்திற்கு கீழ்ப்படிகிறவர்களே சீஷர்கள். சீஷர்களே கிறிஸ்தவர்கள். இப்படி வசனத்தின்படி ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்.2:47). இந்த சபை கிறிஸ்துவினால் கட்டப்பட்டது இது அவருடைய சபை. அவருடைய சபைக்கு அவரே தலைவர். அவருடைய பெயர் மட்டுமே சூட்டப்படவேண்டும். அவருடைய சட்டங்களே பின்பற்றப்பட வேண்டும். அவைகளோடு எதையும் கூட்டுவதற்கோ குறைப்பதற்கோ யாருக்கும் அனுமதி இல்லை இதை அறிந்து உணர்ந்து சத்திய வசனத்தைப் பின்பற்றி சிறந்த கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

## பொது அறிவுச் சோதனை

1. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் அமைந்துள்ள துறைமுகம் எது?
   அ) விசாகப்பட்டிணம் ஆ) கோவா இ) கொல்கத்தா
2. இந்தியாவின் தலைநகர் கொல்கத்தாவில் இருந்து டெல்லிக்கு மாற்றப்பட்ட ஆண்டு எது?
   அ) கி.பி.1911 ஆ) கி.பி.1910 இ) கி.பி.1912
3. கேரளாவையும், தமிழ்நாட்டையும் இணைக்கும் முக்கிய கணவாய் எது?
   அ) பால்காட் ஆ) தால்காட் இ) போர்காட்
4. வைகை ஆறு தோன்றும் இடம் எது?
   அ) ஏலமலை ஆ) அகத்தியர் குன்றுகள் இ) கொல்லிமலை
5. காந்திஜீக்கு 'தேச தந்தை' என்று பட்டமளித்தவர் யார்?
   அ) சுபாஸ்சந்திரபோஸ் ஆ) ராஜாஜி இ) காமராஜர்

விடைகள்
1. விசாகப்பட்டிணம்
2. கி.பி.1911
3. பால்காட்
4. ஏலமலை
5. சுபாஸ்சந்திரபோஸ்


**கிறிஸ்துவின் வசன மாத இதழ்**

தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பவும்.



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202
S.INDIA



# வேதாகம ஆலோசனை

***"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)***

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-3**

***4. இரட்சிப்பு யாருடையது?***

*இக் கேள்விக்கான சரியான விளக்கம். "இரட்சிப்பு கர்த்தருடைய" (சங்.3:8). "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல;" (எபே.2:4-9). முதலாவது தேவன் மனிதனில் அன்புகூர்ந்து தம்முடைய ஒரேபேரான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய மரணத்தினாலே நாம் விசுவாசத்தின் மூலமாக பாவமறக்கழுவப்பட்டு இரட்சிக்கப்படுகிறோம்.*

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து3:5). நம்முடைய நீதி ஒருநாளும் நம்மை இரட்சிக்காது. தேவனோ இரக்கத்திலே ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்ததினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். உலகத்திலே எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் என்று வேதம் போதிக்கிறது. இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். மற்றபடி நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. ஆகையால் தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு கொடுத்து அவர்களை மீட்டார்.*

*அவரைக்குறித்து கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று வாயினாலே அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று இப்படியாக இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே அநுதினமும் சேர்த்துக்கொண்டுவருகிறார் (அப்.2:47). கர்த்தரால் சேர்க்கப்படுகிறவர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படுகிறார்கள். இறுதியிலே அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள்.*

## வேதஅறிவுப்போட்டி எண் 69–ல் வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| G.பூங்கோதை | -வெள்ளைபாளையம் | E.ஜோசப்தேவதாஸ் | -நாகமலை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | S.பிரதீபா | -வேலூர் |
| P.அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு | S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.சாம்பிச்சை | -நாகமலை | J.ஜெம்ஸி | -சென்னை |
| R.சாமுவேல் | -ஊதியூர் | S.ராஜபிரசாத் | -மதுரை |
| G.P.ஏசையன்ராஜ் | -கோபி | R.ஜெயகுமார் | -அம்பத்தூர் |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | R.ஆனந்தகுமார் | -கடுக்கம்பாளையம் |
| Mrs.மரகதம் திரவியம் | -கோம்பை | D.ஏசுதாஸ் EX- ARMY | -சித்தூர் (A.P) |
| K.விமலா | -கல்வெட்டுபாளையம் | N.கமலவேணி | -சென்னை |
| Mrs.ஜாய் கிறிஸ்டினா | -நாகமலை | | |

## வேதஅறிவுப்போட்டி எண் 69–ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆதாம் | -ஆதி.2:20 | 6. சிம்சோனின்தாய் தகப்பன் | -நியா.14:3 |
| 2. ஆட்டுக்குட்டி யானவருடைய | -வெளி.7:14 | 7. தணியக்கடவது | -எபே.4:26 |
| 3. மோசே | -யாத்.34:28 | 8. யோவாஸ் | -2இரா.11:3 |
| 4. கூடாது | -பிர.6:10 | 9. மோசே | -2கொரி.3:13 |
| 5. பேதுரு | -மத்.19:27 | | |

"உங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" –லூக்.10:20.

## சாந்த குணமுள்ளவர்களாக இருப்போம்

★ சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார் – சங்.149:4.

★ சாந்த குணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள் – சங்.22:26.

★ கர்த்தர் சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார் – சங்.147:6.

★ சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் – சங்.37:11.

★ சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் – மத்.5:5.

★ எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும் தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும் – 2தீமோ.2:24.

★ உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக– பிலி.4:5.

★ நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான் – நீதி.15:18.

★ பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் – நீதி.16:32.

★ நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான் – நீதி.14:29.

*M.Rajamani*

சிறுவர் பகுதி

# பவுலை யூதருடைய கைக்கு தப்புவித்த சேனாபதி

**வேதபகுதி: அப்போஸ்தலர்23:8-30**



பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாகி அதனால் கலகம் உண்டானபோது, பவுலை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி சேனாபதி கட்டளையிட்டான். விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டார்கள். இந்த விஷயத்தை பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே சென்று பவுலுக்கு இதை அறிவித்தான். பவுல் அவனை சேனாபதியினிடத்திற்கு அனுப்பி சொல்லும்படி செய்தான். இதைக் கேட்ட சேனாபதி நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி தேசாதிபதியாகிய பேலிக்ஸ்கு ஒரு கடிதத்தையும் எழுதி அனுப்பினான்.

அது என்னவென்றால் கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவருக்குக் கிலவுதியுலீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்; இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறியவேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன். இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விசேயங்களைக் குறித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவனென்று விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன். யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ்சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்.

தேவனை அறியாத ஒரு சேனாபதி பவுலை நியாயம்விசாரித்து மரணத்திற்கு தப்புவித்திருக்கும்போது தேவனை அறிந்த நாம் மரணத்திற்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டாமா?

**மனப்பாட வசனம்:**

“மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி” (நீதி.24:11)

## வேத அறிவுப் போட்டி எண்.70

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை எழுதவும்.* ***சென்றமாதம் விடுபட்ட கேள்வி:***

10. விசுவாசத்தில் எப்படிப்பட்டவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று பவுல் எழுதுகிறார்?

1. ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள் என்று பிரசங்கித்தவன் யார்?
2. கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல் வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை, எல்லாம் என்னவாயிற்று?
3. எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் எதற்குள்ளே அடைத்துப்போட்டார்?
4. நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்குச் சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல், அதைப் பெறும் விலைக்கு வாங்குவேன் என்ற ராஜா யார்?
5. நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், மேலும் யாருக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று பவுல் எழுதுகிறார்?
6. ஆமானை வணங்காமலும், நமஸ்கரியாமலும் இருந்தவன் யார்?
7. வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் யாருடைய நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாக எவரை ஸ்தோத்தரிக்கவேண்டும்?
8. செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒரு க்ஷணப் பொழுதிலே எதில் இறங்குகிறார்கள்?
9. முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் எதற்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது?
10. ஸ்தோத்திர பலியிடுகிறவன் யாரை மகிமைப்படுத்துகிறான்? தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு எதை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்?

## நடப்புச் செய்திகள்

① இந்தியா பாசுமதி 'சூப்பர்' ரக அரிசியை ஏற்றுமதி செய்ய முடிவு.

② ராஜஸ்தான் மாநில சட்டசபையில் கொண்டுவரப்பட்ட மதமாற்றத்தடை மசோதாவை கவர்னர் பிரதிபா பட்டீல் திருப்பி அனுப்பிவைத்தார்.

③ மண்டபம் வந்த அகதிகள் எண்ணிக்கை 1060 –ஐ தாண்டியது.

④ ஓய்வூதியம் தானம் அல்ல; ஊழியரின் உரிமை சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பு.

⑤ இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக அங்குள்ள மெராபி எரிமலை எரி குழம்பைக் கக்கிய வண்ணம் உள்ளது.

Owned and Published by B. Arjunan from
17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and
Printed by R. Sathiyamoorthi at Bharathi Press,
14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR/DDL/164/2006-2008 Licensed to
Post without prepayment License No. TN/WPP-25/SR/2006-2008
Posted at Batlagundu Post Office on 10th June 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.



## கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம் போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 முதல் 6-30 மணிவரை பாருங்கள்
மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவையில்
SW 49 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00
மணிவரை கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India © 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்**
**மாத இதழின் ஆண்டு சந்தா**
ஆண்டு சந்தா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India